**பெருநகர சென்னை மாநகராட்சி**

**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 25** **நாள்: 02.04.2024**

**நாடாளுமன்றத் தேர்தலையொட்டி சென்னை மாவட்டத்தில் பயன்படுத்தப்படவுள்ள வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கான துணை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை கணினி குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணைப்படி, நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளில் வாக்குப்பதிவிற்குத் தேவையான துணை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை கணினி குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி (Supplementary Randomization) மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று (02.04.2024) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் அலுவலகத்தில் நடைபெற்றது.

**பின்னர் மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது :**

சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளில் வாக்குப்பதிவிற்குத் தேவையான துணை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை கணினி குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி இன்று அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது. வடசென்னை மற்றும் தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதிகளில் வாக்குப்பதிவிற்காக வாக்குச்சாவடிகளில் 3 வாக்குப்பதிவு இயந்திரங்களும், மத்திய சென்னையில் 2 வாக்குப்பதிவு இயந்திரங்களும் தேவைப்படுகிறது.

சென்னை மாவட்டத்தில் 3,726 வாக்குச்சாவடி மையங்கள் உள்ளன. இதில் 7 துணை வாக்குச்சாவடிகள் (Auxiliary Booth) அடங்கும். வாக்குப்பதிவிற்கு பயன்படுத்தப்படவுள்ள 4,469 வாக்குப்பதிவு இயந்திரங்கள், 4,469 கட்டுப்பாட்டு கருவிகள், 4,852 வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனை கருவிகள் (VVPAT) உள்ளிட்ட வாக்குப்பதிவிற்கு தேவையான இயந்திரங்கள் 21.03.2024 அன்று கணினி குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு, அந்தந்த சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள பாதுகாப்பு அறைக்கு 26.03.2024 அன்று அனுப்பி வைக்கப்பட்டது.

தற்பொழுது வேட்பாளர்களின் எண்ணிக்கை காரணமாக ஏற்கனவே வழங்கப்பட்ட 4,469 வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் கூடுதலாக துணை மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தேவைப்படுகின்றன. இதற்கென 7,374 துணை மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக கணினி குலுக்கல் முறையில் இன்று தேர்வு செய்யப்பட்டது. சிந்தாதரிப்பேட்டையில் உள்ள பாதுகாப்பு அறையில் உள்ள வாக்குப்பதிவு இயந்திரங்கள் தேர்வு செய்யப்பட்ட எண்களின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் சட்டமன்றத் தொகுதிகளின் பாதுகாப்பு அறைக்கு அனுப்பி வைக்கப்படும்.

வாக்காளர் தகவல் சீட்டுகள் (Booth Slip) 3,25,422 வாக்காளர்களுக்கு நேற்று (01.04.2024) வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து வருகின்ற 13.04.2024 வரை வாக்காளர் தகவல் சீட்டு வழங்கும் பணி நடைபெறும். வாக்குச்சாவடி மையங்களில் 4,472 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் (Presiding Officer) Reserve 20% உட்பட 19,412 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தேர்தல் பணிகளை மேற்கொள்வர். மேலும், ஒவ்வொரு தொகுதிகளிலும் தேர்தல் பணிகளை கண்காணிக்க கூடுதலாக 16 வீடியோ கண்காணிப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர் என மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், தேர்தல் பொது பார்வையாளர் (தென்சென்னை) திரு.முத்தாடா ரவிச்சந்திரா, இ.ஆ.ப., கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., (சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர்), திருமதி ஆர். லலிதா, இ.ஆ.ப., (கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி), டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., (கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்)), டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., (இணை ஆணையாளர் (பணிகள்)), திருமதி ஷரண்யா அறி, இ.ஆ.ப., (துணை ஆணையாளர் (கல்வி), மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்) திரு.ச.சுரேஷ் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தேர்தல் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**